செ.வெ.எண்:213 நாள்:28.03.2018

## பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தென்காசி, செங்கோட்டை, களக்காடு மற்றும் பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியங்கள் தவிர ஏனைய ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 34 ஊராட்சிகளில் காலியாக உள்ள ஊராட்சி செயலர் பணியிடங்களை நிரப்பிட 28.03.2018 தேதி முதல் 13.04.2018 தேதி வரை சம்பந்தப்பட்ட தனி அலுவலர்கள் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)யால் தகுதியுள்ளவர்கள் வசமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட ஊராட்சிப் பகுதிக்குள் வசிப்பவராகவும் அதே ஊராட்சி ஒன்றியத்தில் அவ்வூராட்சியின் எல்லையை ஒட்டிய ஊராட்சிகளில் வசிப்பவராகவும் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர்களின் கல்வித் தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பொதுப்பிரிவினருக்கு 18 வயது முடிந்தும் 30 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். பி.வ./ மி.பி.வ./ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு 18 வயது முடிந்தும் 35 வயது மிகாமலும் இருக்க வேண்டும்.

ஊராட்சி செயலாளர் பணி நியமனத்திற்கு விண்ணப்பிக்க தேவையான இதர தகுதிகள், ஊராட்சி செயலர் காலிப்பணியிடங்களின் விபரம், இன சுழற்சி/இட ஒதுக்கீடு மற்றும் விண்ணப்ப படிவம் ஆகியவை இம்மாவட்டத்தின் www.tirunelveli.nic.in இணையதளத்தில் இடம்பெற்றுள்ளது. காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை 28.03.2018 தேதி முதல் 13.04.2018 தேதி வரை மேற்படி இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் 28.03.2018 தேதி முதல் 13.04.2018 தேதி வரை அலுவலக வேலை நேரத்தில் சம்பந்தப்பட்ட தனி அலுவலர்களின் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.